# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 02.09.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 828/F/2023**

திரு.S.ஆறுமுகம் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்,
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம்-636007. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை-II**

இவ்வாணையம் 22.07.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திரு.S.செல்வகுமார், உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சேலம் லிமிடெட், சேலம் மற்றும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.K.பழனிவேல் ஆகிய இருவரும் 02.09.2026 இன்று நேரில் ஆஜராகி அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் / உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், சேலம் லிமிடெட் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத திரு.K.பழனிவேல், அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் /**

**உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சேலம் லிமிடெட், சேலம் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005, சட்டப்பிரிவு 20(1)- கீழ் அபராதம் ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் 14.10.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 828/F/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(சேலம்) லிமிடெட்,
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம்-636007.

**அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(சேலம்) லிமிடெட்,
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம்-636007.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>புகார்தாரர்</u>**

திரு.சி.ஆறுமுகம்,
எண்.1/110, மல்லிநாயனபள்ளி அஞ்சல்,
போடியப்பன் கொட்டாய் கிராமம்,
கிருஷ்ணகிரி-635120.

Copy to file: KR/PA